**தலைப்பு – 135 – பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்திவரை அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
| --- | --- |
| 293 | இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| ------------ | ------------------------------------------- | ------------------------------------------- |
| 135 | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 2015 ஒக்தோபர் 16 |
| 293 | இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் | 2015 ஒக்தோபர் 14 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 4,277 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 3,915 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 335 மில்லியன் மற்றும் ரூபா 27 மில்லியன்

அளவில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 10.5 சதவீதம் மற்றும் 2.5 சதவீதமாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **தலைப்பு** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள்** |
|---|---|---|---|---|
| | **தேறிய ஏற்பாடுகள்** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 135 | 3,178.02 | 2,843.01 | 335.01 | 10.5 |
| 293 | 1,098.80 | 1,071.66 | 27.14 | 2.5 |
| மொத்தம் | **4,276.82** | **3,914.67** | **362.15** | **8.47** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக பொருளாதார அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ரூபா 72.7 மில்லியன் நிதிஏற்பாடு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 71.49 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1.21 மில்லியன் அதாவது வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 1.7 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2014 ஆம் ஆண்டிற்காக 20.02.01.04 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்குரித்தாக ரூபா 1,000 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அதில் கூட்டுமொத்தமாக ரூபா 733 மில்லியன் அதாவது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 73 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | (பற்றாக்குறை) | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 20. 02.01.04 | 1,000 | 733 | 267 | 26 |

**2.3 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களமொன்றிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **விடய இலக்கம்** | **செலவினம்** | | **பெறுவனவு** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியான | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியான |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 13501 | 5.50 | 3.88 | 3.00 | 3.89 | 30.00 | 15.4 |
| 29301 | 18.00 | 14.77 | 10.00 | 11.20 | 55.00 | 36.81 |

**2.4. கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் கட்டுநிதிக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 456,451 ஆக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26.03 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** |
| பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 6000/0000/000/0015/0047 | 3.63 |
| இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் | 6000/0000/000/0015/0148 | 22.40 |
| **மொத்தம்** | | **26.03** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினதும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 135 – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

---

### 3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2 மில்லியன் தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 06 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

(இ) 03 செலவின விடயங்களுக்காக எவ்வித எதிர்வுகூறல் ஒன்றில்லாமல் நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வேறு செலவின விடயங்களிலிருந்து ரூபா 37.47 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

### 3.2 கட்டுநிதிக் கணக்கு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 10 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 46 சந்தர்ப்பங்களின் போது ரூபா 430,500 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 13 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 118,319 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி செயற்பாடுகள் முடிவடைந்து 01 மாதத்திற்கும் முதல் 02 மாதத்திற்கும் இடைப்பட்ட கால வீச்சில் தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டை தீர்த்தல் தொடர்பான 2014 நவம்பர் 20 ஆந் திகதிய 04/2014 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) மேற்குறித்த சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு செயலாளரால் கணக்கு தீர்த்தலின் பொருட்டு பொறுப்பு வாய்ந்த பதவிநிலை உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு செயலாளரால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் காசேடுகளில் எந்தக் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள முடியாதவாறு குறிப்பு இடப்பட்டிருக்கவில்லை.

**3.3 20.02.01.04 ஆம் இலக்க வருமானக் குறியீடு – பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட்ட குத்தகை வாடகை வருமானக் கணக்கு**

---

அமைச்சின் செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.02.01.04 வருமானக் குறியீட்டின் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அவ்வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டுக்குரிய ரூபா 1000 மில்லியன் வருமானத்தைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 733 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 73 சதவீதமாக இருந்தது. அமைச்சினால் திருத்திய வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசிறைக்கொள்கைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 362 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்தது. அந்நிலுவை வருமானம் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான

காலப்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட போதிலும், அந்நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதில் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(இ) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொட்டகல, கஹவத்த மற்றும் அகலவத்த கம்பனிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அக்கம்பனிகள் மீளாய்வாண்டின் போது எவ்வித வாடகையையும் செலுத்தியிருக்கவில்லை. மேலும் 20 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்கிடையே 8 கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமானத்தில் 22 சதவீதத்திலிருந்து 77 சதவீதம் வரையான வீச்சளவில் நிலுவையாக காணப்பட்டன.

(உ) முன்னைய 5 ஆண்டு காலப்பகுதிக்குரிய நிலுவையாக இருந்த குத்தகை வாடகை வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 362,226,312 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 144,911,867 தொகை அதாவது 40 சதவீதம் மாத்திரம் அறவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது நிலுவை வருமானம் மதிப்பீட்டை விஞ்சி ரூபா 183,295,709 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டிற்குரியதாக மாத்திரம் அது ரூபா 173,348,264 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சேகரிக்கக்கூடிய நிலுவை வருமானம் எதிர்கூறல் நடைமுறை ரீதியாகவும் தர்க்கரீதியாகவும் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை முன்னைய 06 ஆண்டுகளுக்குரிய ரூபா 439,456,846 கூட்டுத்தொகையான நிலுவை குத்தகை வாடகை அறவிடப்படாதிருந்ததுடன், அதற்காக தாமதக் கட்டணம் அறவிடுவது தொடர்பான நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக இணக்கக்கூற்று**

---

13501 ஆம் இலக்க அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,230,388 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) அமைச்சிலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து 20 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இருந்து வரும் ரூபா 99,212 ஆன கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து ரூபா 29,190 ஆன கடன் மீதி நிலுவையாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக்கடனை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஈ) வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலை முடிவுறுத்தப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 5 ஆண்டுகள் முதல் 17 ஆண்டு வரையான காலப்பகுதியில் இருந்து நிலவி வரும் ரூபா 382,461 கூட்டுத்தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) வேலையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 1 ஆண்டு முதல் 5 ஆண்டு வரையான காலப்பகுதியில் இருந்து நிலவி வரும் ரூபா 203,952 கூட்டுத்தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாட்டிற்குட்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

1 ஆண்டிலிருந்து 2 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிருந்து பழுதுபார்க்கப்படாமலோ அல்லது அவ்வாறு செய்ய முடியாதவைகள் கைதவிர்க்கப்பட வேண்டிய 06 வாகனங்கள் தொடர்பாக 2010 யூலை 14 ஆந் திகதிய PA/RS/V.Vehi/2009 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த பொருள் மிகைகள், பற்றாக்குறை மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 இணக்கமின்மைகள்**

---

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

---

பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்குரிய தோட்டங்கள் உப குத்தகைக்கு வழங்கல் இடம்பெற்றிருப்பதால் அச்சிக்கல்களை தீர்வு செய்வதற்கு வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு 09/25641/306/145 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அமைச்சிற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளிலிருந்து விலகல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டல் முறையாக பின்பற்றப்படாமல் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரின் அலுவலகத்தை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 424,468 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் செயலாளரின் இணைப்புச் செயலாளருக்கு 2014 யூன் 02 ஆந் திகதி முதல் ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 203,475 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் அந்த உத்தியோகத்தர் அலுவலகத்தில் வருகை மற்றும் வெளியேறல் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த உத்தியோகத்தருக்கு போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 50,000 செலுத்தப்பட்டிருந்தது. அவர் அமைச்சின் குழாம் வாகனமொன்றையும் பயன்படுத்தியிருந்தமை அவ்வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டக் குறிப்புக்களிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டது.

**3.8 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 11 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களினால் ரூபா 7,736,238 ஆன நட்டங்களும் சேதங்களும் இடம்பெற்றிருந்த போதிலும், அந்த நட்டங்களையும் சேதங்களையும் அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டின் போது களஞ்சியத்தில் பொருட்கள் காணாமல் போனமையால் ரூபா 232,500 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. அத்தகைய நட்டங்கள் மற்றும் சேதங்கள் நட்டப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாதிருந்ததுடன், அதனை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

--------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது வாகனமொன்றை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 1,400,000 என மதிப்பிடப்பட்டிருந்தது. கேள்வி கோரலின் போது கிடைத்த ஆகக்கூடிய பெறுமதி ரூபா 1,032,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆகக்கூடிய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியை விட குறைவாக இருந்தமையால் அமைச்சினால் மீண்டும் கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது அவ்வாகனம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 900,000 ஆக இருந்தது. மீண்டும் கேள்வி கோரும் போது கிடைக்கப்பெற்றிருந்த ஆகக்கூடிய கேள்விப் பெறுமதி ரூபா 756,700 ஆக இருந்ததுடன், அக்கேள்வியை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு வாகனம் கையளிக்கப்பட்டிருந்தது. 2004 அகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் முதலாவது சந்தர்ப்பத்தின்போது போது கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால் அரசிற்கு ரூபா 275,300 ஆன வருமானம் இழப்பதை தவிர்ப்பதற்கு முடியுமாக இருந்திருக்கும்.

(ஆ) 2014 செப்தபம்ர் 28 ஆந் திகதி அதிவேக நெடுஞ்சாலையில் அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்று விபத்திற்குட்பட்டமையால் ரூபா 3,810,756 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாகனத்தின் திருத்த நடவடிக்கைகள் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நவடிக்கை எடுத்து முழுமையான அறிக்கை 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி அளவில் சமர்ப்பிக்குமாறு உள்ளகக் கணக்காய்வாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் உள்ளகக் கணக்காய்வாளரினால் அவ்வறிக்கை 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 16 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 88 | 55 | 33 |
| (iv) | ஆரம்ப நிலை | 43 | 42 | 01 |
| | மொத்தம் | 153 | 115 | 38 |

## 4. தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

### 4.1 பாதீட்டு முரண்கள்

06 மூலதனச் செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 14 சதவீதம் முதல் 46 சதவீதம் வரை வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

**4.2 பொது வைப்புக் கணக்கு**

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களைக் கடந்த ரூபா 2,319,390 ஆன 102 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெருந்தோட்டக் கம்பனியொன்றினால் ஒட்டு இறப்பர் நாற்றுக்களை கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 300,000 திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அப்பணத்தை உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**4.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக இணக்கக்கூற்று**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

29301 ஆம் விடய இலக்க அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,346,505 ஆக இருந்ததுடன், அம்மீதிகள் 01 ஆண்டு முதல் 7 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து நிலவி வந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 242,940 ஆன கடன் மீதி 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து வருவதுடன், 2 ஆண்டு முதல் 3 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து வரும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 92,029 ஆன கடன் மீதியை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 212,810 ஆன கடன் மீதியை 2 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து வந்த போதிலும், அக்கடன் மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஈ) திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்று 2 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து வரும் ரூபா 117,621 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2014 ஆம் ஆண்டிற்காக 27 செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் 15 செயற்பாடுகள் மாத்திரம் கணக்காய்வு செய்யப்பட்டிருந்தன.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

திணைக்களத்திற்குரிய முச்சக்கர வண்டியொன்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைந்த காலமாக இருந்து வரும் பொறுப்புக்கள் ரூபா 55,816,073 ஆக இருந்தது.

## 4.6 வங்கிக் கணக்கு செயற்படுத்தலில் குறைபாடுகள்

விநியோகிக்கப்பட்ட போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 217,306 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக 2015 செப்தம்பர் மாதம் வரையிலும் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 நட்டங்களும் சேதங்களும்

திணைக்கள வாகனமொன்று விபத்திற்குட்பட்டமையால் ரூபா 1,069,227 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்ததுடன், காப்புறுதி கம்பனியிடமிருந்து ரூபா 1,041,982 தொகை கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 27,245 ஆன நட்டமொன்று தொடர்பாக உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 23 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 03 | 13 |
| (iii) | இரண்டாம் நிலை | 362 | 245 | 117 |
| (iv) | ஆரம்ப நிலை | 72 | 69 | 03 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) * | 17 | 17 | - |
| | மொத்தம் | 496 | 357 | 139 |

* தற்போது காணப்படும் பதவிகளுக்கு தனிப்பட்ட வகையில் இறப்பர் மதியுரை சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் இறப்பர் கட்டுப்பாட்டு திணைக்களத்திலிருந்தும் 1994 ஆம் ஆண்டிலிருந்து இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள்.